**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 153/2022

நாள்: 08.07.2026

பெயர்: பழனியம்மாள் (பி.வா.சா.2) க/பெ: வேலாயுதம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

1. என் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.5 பட்டா எண் 427 சொத்து எங்கு உள்ளது என்றால் அது நான் குடியுள்ள வீடு. வழக்கு சொத்திற்கும் இந்த வீட்டிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 287ல் 10 பி உண்டான் ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது 1ஆம் பிரதிவாதி மற்றும் என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 287 ல் 10 ஏ மற்றும் சர்வே எண் 287 ல் 10 பி என்பதில் சர்வே எண் 287 ல் 10 ஏ எனது மாமனார் பெயரில் இருந்து என் பெயருக்கு மாறியது. வாதிகள் சர்வே எண் 287 ல் 10 ஏ க்கு வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான். வாதிகள் மூவரும் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் நாத்தனார் உறவுமுறை வேண்டும். 1ஆம் பிரதிவாதி ராமலிங்கம் எனக்கு கொழுந்தனார் முறை வேண்டும். இந்த வழக்கில் ஒவ்வொரு வாயிதாவிற்கும் என்னை ராமலிங்கம் தான் அழைத்து வருவார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி சுமார் 30 வருடங்கள் இருக்கும். நான் திருமணம் ஆகி வெண்கொண்டான் கிராமத்திற்கு வரும் பொழுது மருதாயி மற்றும் சின்னப்பிள்ளை அந்த கிராமத்தில் தான் இருந்தார்கள் என்றால் தெரியாது.

2. 15 ஆண்டுகளாக தான் அங்கு அவர்கள் வசித்து வருகிறார்கள் என்பது எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6, 7, 8 தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் வீட்டிற்கும் நான்

ராமலிங்கத்திடம் இருந்து கிரயம் வாங்கிய வீட்டிற்கு தனித்தனி மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல. ஆனால் அவ்வாறு இரண்டிற்கும் தனித்தனி மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு உள்ளது என்றும் அதை தெரிந்து கொண்டே இல்லை என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 287/10 என்பது எவ்வளவு விஸ்திணம் என்றால் 3 அல்லது 3 1/2 செண்ட் வரும். அதில் வாதிகளுக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் சரிபாதி உள்ளது என்றால் சரியல்ல. ராமலிங்கத்திற்கும் எனது மாமனாருக்கும் பாதி பாதி. ராமலிங்கத்திற்கு சொத்து பாத்தியப்படுவதற்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் ராமலிங்கத்திடம் இருந்து எந்த தேதியில் கிரயம் வாங்கினேன் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாங்கி சுமார் 17 வருடங்கள் ஆகி விட்டது. ஒரு செண்டிற்கு எவ்வளவு பேசப்பட்டது என்று தெரியுமா என்றால் ஞாபகத்தில் இல்லை. மொத்த சொத்திற்கும் ரூ.1000/- அல்லது ரூ.500/- தான் கொடுத்தேனா என்றால் ரூ.1500/- கொடுக்கப்பட்டது. இன்றைய நிலவரப்படி ஒரு செண்டின் விலை ரூ.2 லட்சம் பெறுமா என்றால் எனக்கு தெரியாது. நான் வாங்கிய கிரயப்பத்திரத்தில் (வா.சா.ஆ.3) வாதிகள் மற்றும் மருதமுத்து கையெழுத்து போட்டார்கள் என்றால் இல்லை.

3. அவர்கள் பெயரில் சொத்து இல்லை அதனால் அவர்களிடம் கையெழுத்து வாங்கவில்லை. ராமலிங்கத்திடம் இருந்து நான் கிரயம் வாங்கிய பொழுது வாதிகளுக்கும் மருதமுத்துவிற்கும் தெரியுமா என்றால் தெரியும். தெரியாது என்றால் சரியல்ல. ராமலிங்கத்திடம் இருந்து நான் கிரயம் வாங்கிய பொழுது வாதிகளுக்கும் மருதமுத்துவிற்கும் தெரியாது என்றும் ஆனால் அவர்களுக்கு தெரியும் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்கிய பொழுது ராமலிங்கத்தின் அப்பா ரத்தினம் உயிரோடு இருந்தாரா என்றால் இல்லை. ரத்தினம் இறந்ததற்கு பின்னர் அவருக்கு உரிய சொத்து அவரது அனைத்து வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. ரத்தினத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவர்களது

அனைத்து வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்ற விபரம் தெரிந்து கொண்டே தெரியாது என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4.தாவா 2வது அயிட்ட சொத்தை நானும் 1ஆம் பிரதிவாதியும் வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் முதலாம் பிரதிவாதி பெயரில் மட்டும் பட்டா வாங்கி கொண்டு மோசடியாக கிரயம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. நான் ராமலிங்கத்திடம் இருந்து கிரய ஆவணம் பெற்றது அரசு மதிப்பீடுக்கு குறைவாகவும் வாதிகளின் பாகத்தை மறைத்தும் பெறப்பட்டுள்ளதால் அந்த கிரயம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்தில் இன்று வரை ராமலிங்கம் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. ராமலிங்கம் அவரது சாட்சியத்தில் தாவா 2ம் அயிட்ட சொத்தில் அவரே குடியிருந்து வருகிறார் என்று கூறியுள்ளார் என்றும் அதற்கு முரணாக நான் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. தற்போது ராமலிங்கம் யார் வீட்டில் சாப்பிட்டு வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா 2வது அயிட்ட சொத்தை நான் கிரயம் வாங்கி கொண்டும் ராமலிங்கம் அங்கு வசித்து வருவதால் தான் எங்கள் இருவரது பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதியை நான் தான் நயவஞ்சகமாக ஏமாற்றி வாதிகளுடன் பேச விடாமல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றம் வாதிகளுக்கு 2ம் அயிட்டத்தில் சொத்தில் பாகம் வழங்கும் பட்சத்தில் இந்த 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்படும் பாகத்தில் இந்த 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற தாவா 2வது அயிட்ட சொத்தை 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கி (Plea of equity என்ற முறையில்) வழங்க வேண்டியது அவசியமாகிறது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு தாவா சொத்தில் 2து அயிட்ட சொத்தை எனக்கு முழுவதுமாக கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. எனது பெயரிலும் ராமலிங்கத்தின் பெயரிலும் உள்ள கூட்டு பட்டா செல்லாது என்றும் நான் வாங்கிய கிரயம் செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில்

வாதிகளுக்கும் சம உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—பழனியம்மாள்
திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி,
என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து
காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு
கையெழுத்து செய்தார்.
ஒப்பம்/—S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்